**செ.வெ. எண்: 543** **நாள்: 02.09.2011**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(2.9.2011)** தலைமைச் செயலகத்தில், பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) துவக்கி வைத்தார்கள்.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் அவர்களின் உரையின்போது சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை வங்கிகளின் மூலமாக வங்கி சேவையாளர்களின் உதவியுடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வழங்கும் முன்னோடி திட்டம் கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை வட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டம் ஆகியவற்றில் **2.9.2011** முதல் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்படி, சமூக பாதுகாப்பு திட்டத்தில் மாதாந்திர ஓய்வூதியம் பெறும் ஒவ்வொரு பயனாளிகளின் பெயரிலும் வங்கிக் கணக்கு தொடங்கப்படும். பயனாளிகளின் அங்க அடையாளங்களை அடிப்படையாக கொண்ட (Bio Metric Smart Card) அட்டையை பயன்படுத்தி வங்கிச் சேவையாளர்கள் மூலமாக பயனாளிகளின் கிராமத்திற்கே நேரில் சென்று பயனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை வட்டத்தில் **9,882** பயனாளிகளுக்கும், கடலூர் மாவட்டம் – காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் **10,560** பயனாளிகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை வட்டத்தில் **3,562** பயனாளிகளுக்கும் இந்த மாதம் முதல் ஓய்வூதியம் வழங்கப்படும்.

இந்த முன்னோடி திட்டம் காட்டுமன்னார்கோவில், மணப்பாறை மற்றும் தோவாளை ஆகிய வட்டங்களில் இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பேங்க் ஆப் இந்தியா, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி ஆகியவைகளை உள்ளடக்கிய பொதுத்துறை வங்கிகளின் கூட்டமைப்பால் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட மூன்று வட்டங்களைச் சேர்ந்த **268** கிராமங்களில் **24,004** பயனாளிகள் உள்ளனர். இவர்களில் இந்தியன் வங்கி மூலம் **8,448** பயனாளிகளும், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் **6,646** பயனாளிகளும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் **4,848** பயனாளிகளும், பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் **2,572** பயனாளிகளும், கனரா வங்கி மூலம் **1,490** பயனாளிகளும் ஓய்வூதியம் பெறுவார்கள். இதற்காக அனைத்து பயனாளிகள் பெயரிலும் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதுடன் மேற்கண்ட சேவைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்களில் சேவையைத் துவங்க வங்கி சேவையாளர் இணைவமைவு (network of Banking Correspondents) ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வங்கி சேவையாளரும் பயனாளிகளை சரியாக அடையாளம் கண்டுக்கொள்வதற்காக எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய G.P.R.S. இணைப்பு மற்றும் அச்சு இயந்திரத்துடன் கூடிய சேவைக்கருவி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. வங்கி சேவையாளர் பயனாளிகளுடைய அட்டையை (Smart Card) அந்த இயந்திரத்தில் செலுத்துவார். அதன்பின் பயனாளிகள் விரல் ரேகையை இயந்திரத்தில் சரிபார்க்கப்பட்டு பணம் பெறுவதற்கு அங்கீகாரம் அளிப்பர். அங்கீகாரம் முடிவு செய்யப்பட்ட பின் வங்கி சேவையாளர் பணத்தைக் கொடுப்பார். இதில் பயனாளி முழு தொகையையும் பெற்றுக்கொள்ளலாம் அல்லது தனது மாதாந்திர ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மட்டும் அந்நேரத்தில் பெற்றுக்கொண்டு மீதித் தொகையை பிறிதொரு முறை பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறாக பணப்பட்டுவாடா முடிந்தபின் அந்த பயனாளிகளின் கணக்கில் இருப்பு எவ்வளவு உள்ளது போன்ற விவரங்கள் அச்சுப்பொறியின் மூலம் கணக்கு சீட்டு வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமுத்திரம் கிராமத்திலும், கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை கிராமத்திலும், கடலூர் மாவட்டம் – உடையார்குடி கிராமத்திலும் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) துவக்கி வைத்தார்கள். மேலும், முதியோர் உதவித் தொகை பெறும் ஏழு பயனாளிகளுக்கு பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை துவக்கி வைத்தமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திரு. கோவிந்தராஜ் பேசியதாவது:- "மாற்றுத் திறனாளி ஒய்வூதியம் வாங்குகிறேன் அம்மா. 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள் அம்மா. எங்களுக்கு சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது அம்மா. இந்த 500 ரூபாய் வாங்கும்போது போஸ்ட் ஆபீஸ் சென்று வாங்கும்போது 10, 15 தேதி ஆகிறது அம்மா. இப்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக எந்த நேரத்திலும் எங்களுடைய கைரேகை வைத்து பணம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் அம்மா. எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் அம்மா. நன்றி, வணக்கம்."

பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை துவக்கி வைத்தமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. இதயமேரி அவர்கள் பேசியதாவது:- "தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வணக்கம். முன்னர் 500 ரூபாய் வழங்கினார்கள். அம்மா அவர்கள் 1000 ரூபாயாக உயர்த்தி வழங்குகிறீர்கள். ரொம்ப சந்தோஷம். அதே பணத்தை வங்கியின் மூலமாக கிராம கிராமமாக ஒரே இடத்தில் அமர்ந்து கைரேகை வைத்து எங்களுக்கு பணம் கொடுக்கிறார்கள். நன்றி, அம்மாவுக்கு வணக்கம்.

பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை துவக்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:- "அனைவருக்கும் வணக்கம். தமிழக அரசு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஏழை எளிய ஆதரவற்ற முதியோருக்கு மாத ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டத்தை Smart Card மூலமாக வழங்குகின்ற முன்னோடி திட்டத்தை இன்று துவக்கி வைத்ததில் உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அரசு வழங்குகின்ற இந்த ஓய்வூதியத் தொகையை பெறுவதில் இதுவரை சில சிரமங்கள் இருந்து வந்தன. இன்று இந்த புதிய முன்னோடி திட்டத்தின் மூலமாக அந்த சிரமங்கள் எல்லாம் நீக்கப்பட்டு, களையப்பட்டு பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே, பயனாளிகள் வசிக்கின்ற கிராமத்திற்கே சேவையாளர்கள் நேரில் சென்று பயனாளிகளுக்கு இந்த ஓய்வூதியத் தொகையை வழங்குகிறார்கள். இந்த Smart Card மூலமாக இந்த மாதமே பயனாளிகள் ஓய்வூதியத் தொகையை பெறலாம். எனவே தமிழக அரசு சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் அனைவருக்கும் இந்த புதிய திட்டம் பயன்தரும் என்றும், இந்த அரசு வழங்குகின்ற உதவித்தொகை உதவிகரமாக இருக்கும் என்றும் நம்புகிறேன். அனைவருக்கும் வங்கி சேவையாளர்களுக்கும், இந்த திட்டத்தின் பயனாளிகளுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த்துறை முதன்மைச் செயலர், வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர், இந்தியன் வங்கி, பேங்க் ஆப் இந்தியா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆகியவற்றின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 2.9.2011